Koviloor Digital Library

3-5

உ

முருகா

கந்தர் கவசங்கள்

(விரிவுரையுடன்)



ஸ்ரீ பாலதேவராய சுவாமிகள்

அருளிய

கந்தர் சஷ்டி கவசம்



ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள்

அருளிய

சண்முக கவசம்


KOVILOOR AN... LIBRARY, KOVILOOR
A. No. 30807

வெளியீடு;

சமயப் பிரச்சார நிலையம்

17, சித்தன் தெரு சேலம் 636 001

1984] [ரூ. 2—50

Koviloor Digital Library

முன்னுரை

முருகப் பெருமானின் துதிப்பாடல்களுள் சிறந்த ஒன்று கந்தர் சஷ்டி கவசம். சென்னிமலையில் அவதரித்த ஸ்ரீ பாலதேவராய சுவாமிகளால் பழநியில் ஸ்ரீ தண்டாயுதபாணியின் திருச்சந்நிதியில் பாடப்பெற்ற இது உடலையும் உள்ளத்தையும் தாக்கும்பகைவர்களிடமிருந்து நம்மை காத்து முடிவில் முருகன் திருவடிகளில் சேர்க்கும் மந்திர நூலாகும். நிலைமண்டில ஆசிரியப்பாவால் அமைந்த இந்நீண்ட நெடிய தோத்திரப்பாடல் காப்புச் செய்யுள்களாக நேரிசை வெண்பா ஒன்றினையும் குறள்வெண்பா ஒன்றினையும் கொண்டு இலங்குகிறது.

இந்நூலின் முதல் பகுதியில் சஷ்டிநாளில் மயிலேறும் மாணிக்கத்தை வாவென அழைக்கும் பாங்கு வெளிப்படுகிறது சரவணபவ எனும் மந்திரத்தை மாற்றிமாற்றி சொல்லும்அழகு இப்பகுதியின்தனிச்சிறப்பாகும்.அன்பர்குரல்கேட்டு அறுமுகன் வரும் பாங்கு அடுத்த பகுதியில் பேசப்படுகிறது. வந்த முருகன் திருவடியைப் பணிந்து உடம்பினைப் பேணிக்காக்க உத்தமன் கை வேலை வேண்டும் பகுதியே மூன்றும்பகுதி, அடுத்தபகுதியில் உயிரையும் உடலையும் தாக்கும் பகைகளின் பட்டியலைத் தருகிறார். வந்தருள் செய்த வள்ளிமணவாளனின் சந்த திரு நாமங்களினை சொல்லி மகிழும் பகுதியே அடுத்தது. சொல்ல சொல்ல தித்திக்கும் சுந்தர திருநாமங்களின் பட்டியலை இதில் தருகிறார்.

முருகன் திருவடிக்கு போற்றிசொல்லி சரணம் சொல்லும் பகுதி ஈற்றில் அமைந்துள்ளது இப்பகுதியில் போற்றியும் சரணமும் அர்ச்சனைக்குரிய வடிவில் அமைந்துள்ளது சஷ்டி நாளில் சரவணபவனை ஓதுவாரை காத்தருளும் உயர்ந்த இப் பாட்டின் பொருள் உணர்ந்து ஓதுவது சிறந்த பலனைத் தரும் என எண்ணி சமயப் பிரச்சார நிலைய வெளியீடாக இதனைக் கொணருகின்றோம்.

இதனுடன் இணைத்து வெளியிட்டுள்ள ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் அருளிய சண்முக கவசம் எனும் நூலின் சிறப்பினைப் பற்றி தனியாக விளக்கப்பட்டுள்ளது கந்தனின் அருளைப்பெற வழிகாட்டிகளாக விளங்கும் கவச நூல்களை அன்பர்கள் ஓதி வள்ளி மணாளன் தண்ணருள் பெற்றுய்ய வேண்டுகிறேன்.

அன்பன்

17, சித்தன் தெரு
சேலம்-1.

தே. ம. பூதலிங்கம்
சமயப் பிரச்சார நிலையம்

Koviloor Digital Library

3-5







கந்தர் சஷ்டி கவசம்

[விரிவுரையுடன்]

காப்பு

குறள் வெண்பா

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி

ஏ! நெஞ்சமே! (மனமே) தேவர்களுடைய துன்பமானது நீங்கும்படி சூரபதுமன் முதலிய அசுரர்களோடு போர்புரிந்த குமரக்கடவுளின் திருவடிகளைக் குறித்து நீ தியானிப்பாய் நீ துன்பங்களினின்றும் விடுபட்டு, நினைத்தகாரியம் நிறைவேற வேண்டுமாயின் முருகப்பெருமானின் திருவடிகளைக் குறிப்பாக தியானப் பொருளாக வைத்து இடை ஈடின்றி சிந்திப்பாய் ''மனமது செம்மையானல் மந்திரம் ஜெபிக்க வேண்டாம்'' எனவே மனத்தினை ஒரு நிலைபடுத்தினல் ஏனைய தானே வரும் என்று அறிவுறுத்தக் கருதிய சுவாமிகள் முதலில் மனதை முன்னிலைப்படுத்திக் கூறினர்.

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்—கதித்துஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

Koviloor Digital Library

ஆணவாதி மலங்களால் தாக்கப்படாத சிவபெருமான் திருவருளினால் தோன்றிய கந்தப்பெருமானைப் பற்றி சஷ்டி கவசமாகிய இம்மந்திர நூலை ஆசாரத்துடன் நியதியாக ஓதி வருபவர்களுக்குக் கொடிய வினைகளும் அவற்றால் ஏற்படும் துன்பங்களும் நீங்கும். மனத்திலிருந்து நீங்கா வண்ணம் இடைவிடாது தியானிப்பவர்களுக்கு நிஷ்டை கைகூடி இம்மை, மறுமை, செல்வங்கள் உண்டாகி, அவை மேன் மேலும் பெருகும், இருவினை ஒப்பு, மலபரிபாகம், சத்தினி பாதம் முறையே நிகழும் என்பதாகும்.

நூல்

நிலமண்டில ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக்கு உதவும் செங்கதிர் வேலோன்,
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண் கிணியாட
மையல் நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்கவென்று உவந்து,

சரவணப் பொய்கையில் தோன்றிய முருகப்பெருமானின் சஷ்டிக் கவசத்தை பக்தியுடன் சிஷ்யர்கள் மனத்தினால் சிந்திக்கச் சிந்திக்க அவர்களுக்கு உபகாரம் செய்கின்ற செம்மையான கதிர்களையுடைய வேலாயுதத்தை உடையவன், இரண்டு பாதங்களிலும் பல மணிகள் கோர்க்கப் பெற்ற சதங்கை, அழகிய இசை எழுப்பவும், தண்டை அசைவதால் "கணீர் கிணீர் என்ற ஓசை எழவும், கண்டவர் மகிழ்ந்து விரும்பும் வண்ணம் நடனம் புரிகின்ற மயில் வாகனத்தை யுடைய முருகப்பெருமான், என் முன்னே தோன்றி கையிலிருக்கின்ற செங்கதிர் வேலால் என்னைக் காக்க வேண்டுமெனக் கருதி சஷ்டிக் கவசமெனும் இம்மந்திரத்தைத் தியானிக்க,

(மயிலைத் தனக்கு வாகனமாகக் கொண்டருளிய முருகக் கடவுள் எனக்கு முன்னே கண்கூடாக வந்து தோன்றி

Koviloor Digital Library

காட்சியளித்து அடியேனை ரக்ஷிக்க என்று மனத்திலே நினைத்து சஷ்டி கவசமாகிய இம்மந்திரத்தை மனத்திலே தியானம் செய்யவும் என்பது கருத்து)

வரவர வேலா யுதனார் வருக,
வருக வருக, மயிலோன் வருக,

வேலாயுதத்தையுடைய பெருமானார் அடியேன் அவரைச் சிந்திக்கச் சிந்திக்க என் முன்னே தோன்றியருளுக. மயிலைத் தனக்கு வாகனமாகக் கொண்ட முருகப்பெருமான் வந்தருள் புரிக. வந்தருள்புரிக, வந்தருள்புரிக. (முருகனுக்கு வேலும் மயிலும் சிறந்த பொருள்கள். படைவீரனுக்கு ஊர்தியும், ஆயுதமும் மிகவும் முக்கியமானவை. முருகனுக்கு மயிலாகிய ஊர்தியும், ஆயுதமாகிய வேலும் சிறப்பு பெற்றன. பகைமையை அழிப்பதற்கு இரண்டு சாலச் சிறந்த பொருள்களாக அமைந்தது போல இங்கு மன இருளாகிய பகைமையை ஓட்ட ஓதும் மந்திரத்திலும், வேலையும் மயிலையும் உடையான்வந்து என் மனவிருளை அகற்றி அருள்புரிக என்பது உட்கிடக்கை)

இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக, வருக

இந்திரன் முதலிய அஷ்டதிக்குப் பாலகர்கள் (இந்திரன் அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன்) வணங்கும் பெருமையுடைய மந்திர சக்தி வாய்ந்த கூர்மை மிக்க வேல்; அடியேனுடைய துன்பத்தை தீர்ப்பதற்கு வருக வந்தருள்க. (ஆயுதங்களைப் பகைவர்மீது ஏவும் பொழுது முறைப்படி அவற்றிற்குரிய மந்திரங்களை தியானித்து பிரயோகித்தல் மரபு. அங்ஙனம் பிரயோகிக்கப்பட்ட மந்திராயுதம் குறி தவறாது செயல்புரியும் ஆற்றல் உடையது. அது பற்றியே இங்கு ''மந்திர வடிவேல்'' என்றனர் ஆசிரியர் இவ்வடிகளில் பெருமானின் ஞானசக்தியை வியந்து கூறினர்.

வாசவன் மருகா வருக வருக,
நேசக் குறமகள் நினைவோன் வருக,

Koviloor Digital Library

அஷ்ட ஐஸ்வரியங்களின் தலைவனான தேவேந்திரனின் மருமகனே, அனைபுமிக்க குறமகளாகிய வள்ளியம்மையின் அன்பை நினைத்து அவளுக்கு அனுக்கிரகம் புரிகின்ற பெருமானே வருக வருக,

ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறுஇடும் வேலவன் நித்தம் வருக

ஆறுமுகங்களையுடைய குருநாதனே வந்தருள்க. தன் திருமேனியில் நீறு துலங்க வேலைக் கையில் தரித்த காட்சியுடன் அடியேன் முன்னிலையில் எப்பொழுதும் தோன்றி அருளுக· (நீறிடும் என்பதை வேலுக்கு அடைமொழியாய்க் கொண்டால் பகைமையை நீற்றிடும் நீருக்கும் தன்மையுடைய வேல் எனக் கொள்ளல் வேண்டும்.)

சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக,
சரவண பவனார் சடுதியில் வருக

சிரா மலையில் வாசஞ் செய்கின்ற வேலாயுதக் கடவுள் விரைவில் வந்தருள்க சரவணப் பொய்கையில் தோன்றிய பெருமான் விரைந்து வந்து அருள் புரிக.

ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா! நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணபவ வருக வருக
அசுரர் குடி கெடுத்த ஐயா

(முருகனுடைய ஆறெழுத்து மந்திரமாகிய 'சரவணபவ' பலமுறையில் மாற்றி மாற்றி அமைக்கப்பட்டன. அவற்றோடு பீஜாக்ஷரங்களும் சேர்க்கப்பெற்றன அதோடு சில அடுக்குத் தொடர்களை வேகம் கொடுக்கும் வகையில் சேர்த்திருக்கின்றன இங்ஙனம் பலவகையாக அமைக்கப் பெற்றுள்ள மந்திர சொரூபமான வீரனே உனக்கு வணக்கம் செலுத்துகிறேன். அசுரர் குலமுழுதும் பொடியாக்கிய பெருமானே வருக வந்தருள்க.

Koviloor Digital Library

என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண்டு ஆயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டு இலங்க
விரைந்து எனைக்காக்க வேலோன் வருக :

அடியேனைக் காத்தருள்கின்ற, என்றும் இளமை மாருத குமரனுகிய வேலாயுதன் பன்னிரு கைகளிலும் பாசம் அங்குசம் முதலிய ஆயுதங்களைத் தாங்கி, விசாலமானபன்னிருகண்களும் பிரகாசிக்க, விரைந்து வந்து என்னைக் காத்தருள்க.

ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றுஎன்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனிஒளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன் தினம் வருக

உய்வதற்கு ஒளி வீசுகின்ற முறைமையுடைய ஐயும் கிலியும், சௌவும், யொவ்வும் முதலிய பீஜாக்ஷரங்கள் நிலை பெற்று அடியேன் முன்னிலையில் தினமும் தோன்றும், ஒப்பு வமையில்லாத ஒளிமிக்க சண்முகப்பெருமானும் அனைத்திற்கும் மூலாதாரமாகிய சிவனே குகனுகிய அவனும் தினமும் வந்தெனைக் காத்தருள்க.

ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறுஇரு திண்புயத்து அழகிய மார்பில்
பல்பூஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்

Koviloor Digital Library

முப்புரி நூலும் முத்து அணி மார்பும்
செப்புஅழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்
இருதொடை அழகும் இணை முழந் தாளும்
திருவடியதனில் சிலம்பொலி முழங்க,

ஆறுமுகங்களும், அழகிய கிரீடங்களும் திருநீறு அணிந்த நெற்றிகளும், நீண்ட புருவமும், பன்னிரு கண்களும், பவளம் போன்ற செவ்வாயும், நெற்றிகளில் நவரத்தினங்களால் செய்ய பட்ட சுட்டியும் பன்னிரு செவிகளில் விளங்குகின்ற குண்டலங்களும், பன்னிரு புஜங்களிலும் அழகிய மார்பிலும் பொருந்திய பலவகையான ஆபரணங்களும், பதக்கமும் நவரத்னமாலையும அணிந்து முப்புரி நூலாகிய பூணூலும் முத்துமாலையும் அணிந்த திருமார்பும, புகழத்தக்க பேரழகுடைய திருவயிறும் தொங்புளும் அசைகின்ற இயல்புடைய இடுப்பில் பிரகாசிக்கின்ற ஒளியுடைய பட்டாடையும் நவரத்னம் பதித்த் கவசமும் இரு தொடைகளின் அழகும் திருவடியில் சிலம்பும் ஒலிக்க வந்தருள்க.

செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகன
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரா ரரரர ரரரர ரரர
ரிரிரி ரிரிரி ரிரிரி ரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு,
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து,

செககண—பூமியிற் பொருந்தியிருப்பவனே (சூரசம்காரம் செய்யும் பொருட்டு முருகப்பெருமான் பூவுலகில் பல இடங்

Koviloor Digital Library

களிலும் கோவில் கொண்டிருந்தமையால் பூமியிற் பொருந்தியிருப்பவனே என விளித்தனர்) ''மொகமொக'' முதல் ''டிங்குகு'' வரையிலும் உள்ள தொடர்கள் வெவ்வேறு மந்திர பீஜங்கள் மயில்வாகனத்தையுடைய மூலாதாரப்பொருளாகிய முருகவேளே அடியேன்முன் விரைந்துவந்து அருள் புரிவாயாக

எந்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதன் என்று
உன் திருவடியை உறுதியென்று எண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க;

அடியேனைக் காத்தருள்கின்ற ஏரகம் என்னும்திருப்பதியில் எழுந்தருளியிருக்கின்ற செல்வமே! உன் பிள்ளையாகிய நான் கேட்கும் வரங்களை மகிழ்ந்து தருவாயாக, பக்தர்கள் லாலா எனத்துதிக்கும் குதூகல ஆவேசமும் சகல லீலாவிநோதனும் நீயென்று உறுதியாய் எண்ணி உன் திருவடியே சரணம் என்று இருக்கின்ற அடியேனுடைய தலையில் உன் திருவடிகளை வைத்து திருவடி தீக்ஷை செய்து என்னைக் காப்பாற்றுவாயாக.

என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க;
பன்னிரு விழியால் பாலனைக் காக்க;
அடியேன் வதனம் அழகுவேல் காக்க;
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத்து இருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க

Koviloor Digital Library

கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என் இளங் கழுத்தை இனியவேல் காக்க

என்னுயிர்க்குயிராய் வீற்றிருக்கின்ற இறைவனே! அடியேனைக் காத்து அருள் புரிக உன்னுடைய பன்னிரண்டு கண்களாலும் அடியேனைக் கடாக்ஷித்தருள்க. அடியேனுடைய முகத்தை தேவரீருடைய அழகிய வேலாயுதம் காத்தருள்க. திருநீறு புனைந்த நெற்றியை தேவரீருடைய தூய்மையான வேலாயுதம் காத்தருள்க. கூர்மை பொருந்திய ஒளிமிக்க வேல் கண்களைக் காத்தருள்க. பிரமனால் சிருஷ்டிக்கப்பட்டு கல்வி கேள்வியறிவைப் பெற்றுக்கொள்கின்ற இரு காதுகளையும் வேலவரே. நீர் காத்தருள்க. இரண்டு நாசிகளையும் நன்மை புரிகின்ற வேல் காப்பதாக உமது புகழைப் பேசுகின்ற வாயை உம்முடைய பெருமைமிக்க வேல் காப்பதாக, 32 பற்களையும் கூர்மைமிக்க வேலாயுதம் காக்கக் கடவது உம்முடைய துதிகளை கூறிய நாவை சிவந்த வேலானது காக்கட்டும். இரண்டு கன்னங்களையும் பிரகாசம் பொருந்திய வேல் காக்கக் கடவது அடியேனுடைய இளமையான கழுத்தை இங்கிதமேசெய்கின்ற வேல் காக்கக் கடவது.

மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேர்இள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாண் ஆம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க

Koviloor Digital Library

3-4

பணைத்தொடையிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க

இரத்தினங்களால் இழைக்கப்பட்ட கூர்மையான வேலாயுதம் அடியேனுடைய இருதயத் தானத்தையும் அழகிய வேலாயுதம் இளமை பொருந்திய இரண்டு பக்கத்து மார்பு ஸ்தானங்களையும் காத்தருள்க. கூர்மையான வேல் என்னிரு தோள்களையும், பெருமைமிக்க வேல் இரண்டு பிடரிகளையும் வளமையுண்டாக்கும் வண்ணம் காத்தருள்க. அருள் கூடிய வேல் முதுகையும், வண்மையுடைய வேல் பதினாறுவிலா எலும்புகளையும் செவ்வையாய்க் காத்தருள்க. வெற்றி வேலாயுதம் வயிற்றை அழகுபெறக் காப்பதாக. கருவுற்பத்திக்கு ஏதுவாகிய கயிறு போன்ற நரம்பை நன்மை பயக்கும் வேல் காப்பதாக. (கயிறு போன்ற நட்டெலும்பை வேல் காப்பதாக எனினும் கொள்ளலாம்) பெருமைமிக்க வேல் இரண்டு பீஜங்களையும் வட்ட வடிவமான ஆசன வாயிலை வலிமைமிக்க வேலும் காப்பதாக வலிமையுடைய முழந்தாள் கணைக்கால் தொடை முதலியவற்றைக் கூர்மையான வலிமை பொருந்திய வேல் காத்தருள்க.

ஐவிரல் அடியிணை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நல்துணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க

அருள் நிறைந்த வேல் ஐந்து விரல்களுடைய இரண்டு அடிகளையும் கருணையுடைய வேல் கைகளிரண்டையும் காத்தருள்க. வலிமைமிக்க வேல் முன் கைகளைக் காக்க இரண்டு

Koviloor Digital Library

பின்கைகளிலும் திருமகன் உறைவாளாக நாக்கில் சரஸ்வதி தேவி நல்லதுணையாகப் பொருந்துவதாக உந்திக் கமலத்தை நல்ல வேலாயுதம் காத்தருள்க கூர்மையுடைய வேல் மூன்று நாடிகளேயும் காப்பதாக. எப்பொழுதும் அடியேனை பகைவர் களோடு போர்புரிகின்ற வேலாயுதம் காப்பதாக. அடியேன் தளர்வுற்ற பொழுது வசனம் நாவினின்று வெளிப்படும் சமயம் பொன்மயமான வேல் விரைந்து வந்து காத்தருள்க.

வரும்பகல் தன்னில் வச்சிர வேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கி சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க

நாள்தோறும் வருகின்ற பகற் காலங்களில் வச்சிர வேலாயுதம் காப்பதாக நடுநிசியிலும் அவ்வேல் காத்தருள்க. இராக்காலங்களிலும், நான்கு சாமங்களிலும் பகைவரைத் தாக்குகின்ற வேல் காத்தருளுக தாமதத்தை போக்கும் திறமை யுடையவேல் வெற்றியுடன் காப்பதாக. ஒருநொடிப்பொழுதும் விடுதலின்றி பொன்மயமான வேல் அடியேனைக் காத்தருளுக. அடியேன் பக்கம் அவ்வேல் அன்புடன் பார்த்தருள்க.

தாக்க தாக்கத் தடையற தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட

அடியேன் செய்த பாவங்கள் தூளாகும்படி அவ்வேல் பார்க்கக் கடவது முன்னேற்றப்பாதையில் ஏற்படும் தடைகளை அவ்வேல் நீக்கக்கடவது.

பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்,
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்;
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்

Koviloor Digital Library

கொள்ளிவாய்ப் பேய்களும், குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக் கதரும்
அடியேனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்,

பகைவர்களைத் துன்புறுத்தும் பொருட்டு ஏவிவிடுகின்ற பில்லிஎன்னும் பேயும் துன்புறுத்திக் கொல்லுமாறு செய்கின்ற மாரணவித்தையும், வலிமை மிக்க பூதங்களும், பலம் பொருந்திய பைசாசங்களும், துன்பத்தைக் கொடுக்கின்ற கட்டுக்கடங்காத கொடிய கோபத்தை யுடையவர்களும், வீட்டின் பின்பக்கம் பிள்ளைகளைத் தின்பதற்காக காத்து நிற்கின்ற முனிகள் எனும் பேய்களும், கொள்ளிக்கட்டைகளை வாயில் வைத்துக் கொண்டு திரிகின்ற பேய்களும், கொடுந் துன்பம் விளைகின்ற குறுகிய வடிவுடைய பேய்களும் இளம் பெண்களைத் தொடர்ந்து துன்புறுத்துகின்ற பிரம்மராக்ஷதப் பேய்களும இரிசி என்ற அலிப்பேய்களும் காட்டேரி என்னும் துஷ்டப்பேயும் முதலான துன்பம் விளைவிக்கின்ற பேய்ப்படைகளெல்லாம் அடியேனைக் கண்டால் பயந்து கலக்கமுற்று அலறியோடும்படி அருள் புரிவாயாக. (பகைவர்கள் வஞ்சம் தீர்க்கும் பொருட்டு செய்யும் மந்திர ஏவல் என்னைத் தொடாதிருக்கவும் நீ என்னைக் காத்தருளல் வேண்டுமென விண்ணப்பித்தல்.)

எல்லினும் இருட்டினும் எதிர்படும் அண்ணரும்
கனபூஜை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங் காரரும், மிகுபல பேய்களும்,
தண்டியக் காரரும் சண்டாளர் களும்,
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும் பாவைகளும்

பகலிரவு காலங்களில் எதிர்படுகின்ற அண்ணர்கள் என்ற தேவதைகளும் பெரும் பூஜைகளை ஏற்றுக்கொள்ளும் காளியும் அவளைச் சேர்ந்த பரிவார தேவதைகளும் கொலைத் தொழில் செய்கின்ற பூதப்படைகளும், இதைத்தவிர உள்ள

Koviloor Digital Library

பலவகையானப் பைசாசங்களும் பல்லக்கின் மேல் பவனி வருகின்ற பிசாசுக் கூட்டங்களும், ஆளைகள் நிற்கின்ற இடங்களில் மாவினுல் பாவை செய்து மந்திர உருவேற்றிப் புதைத்து வைத்துப் பிறரை அழிக்கும்படிச் செயகின்ற சூனியம் முதலிவை யெல்லாம் கருணைக் கடலாகிய உன் அடியேனுகிய என் பெயர் சொன்ன மாத்திரத்தில் இடி விழுந்த மாதிரிக் கலங்கி ஓடிட அருள் புரிவாயாக.

பூனை மயிரும், பிள்ளைகள் என்பும்,
நகமும் மயிரும், நீண்டமுடி மண்டையும்
பாவைகள் உடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட

காட்டுப் பூனையின் மயிரும் தலைப்பிள்ளைகளின் எலும்பும் பெருவிரல். நகமும், நீண்ட முடியையுடைய மண்டையோடும் பல பரப் பதுமைகளுடன் மந்திர உருவேற்றி மாரகத்திற் காசப் புதைத்து வைக்கின்ற மட்கலங்களும், பிறருக்குக் கெடுதி செய்யும் பொருட்டு கற்கின்ற ஒட்டியம் என்னும் மந்திர நூல்களாகிய அகங்காரமும், அந்நூல்களிற் சொல்லியபடி பிறரைக் கெடுப்பதற்குச் செய்கின்ற பதுமைகளும் அக் கிரியைக்காக வைக்கின்ற ரத்தினம், பணம், பலிகள், குருதியில் விரவிய சோறு மாந்திரீக மை. மனதைக் குழப்பி பைத்திய முண்டாக்கி தானே அலைந்து திரிய வைக்கின்ற வித்தை முதலியவெல்லாம் அடியேனைக் கண்டபொழுதிலேயே உருக்குலைந்து கலங்கி ஓடிட அருள்புரிவாய்.

மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட் டோடப்

Koviloor Digital Library

பகைவர்களும், வஞ்சகர்களும், காலத்தை கணக்கிட்டு உயிரைக் கவர்ந்து செல்ல வருகின்ற எமதூதர்களும் அடியேனைக் கண்டவுடன் பயந்து, வணங்கி, பிரமிப்பினுல் கீழே விழுந்து புரண்டு வாய் விட்டலறிக்கொண்டே ஓடும்படி அருள் பாலிப்பாய்.

படியினில் முட்டப் பாசக் கயிற்றுல்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்;
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக

சூரபதுமர்களுடைய பகைவனுன அன்றும் இன்றும் என்றும் இளமையோடும், அழகோடும் இருப்பவனே முன்னே கூறிய துன்பம் கொடுக்கும் பேய்ச் சக்திகளும் மந்திர சக்திகளும் பூமியில் மோதும்படி பாசக் கயிற்றுல் அவற்றைக் கட்டுக; அவற்றின் அவயங்கள் ஒவ்வொன்றும் கதறும்படி கட்டுவாயாக.

அவை மீண்டும் எவர்க்கும் தீங்கு விளைவிக்காதபடி அவற்றின் கை, கால்கள் முறியும்வண்ணம் கட்டியுருட்டு வாயாக அவைகளுடைய கண்கள் பிதுங்கும்படி தரையில் மோதச் செய்வாயாக, அணுவணுவாக அவைகளை வதைப் பாயாக. தேவரீருடைய கூர்மைமிக்க வேலால் அவைகளைத் தாக்கி சூரிய வெப்பத்தைபோல் அவைகளைப் பற்றி நீ எரிக்கக் கடவாயாக.

விடு விடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நாயும் புன்னரி நரியும்

Koviloor Digital Library

எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட, விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதனில் இறங்க

உனதடியார்களைத் தாக்கவருகின்ற புலி, நரி, குள்ளநரி நாய், எலி, கரடி, தேள், பாம்பு, செய்யான் பூரான் முதலிய துஷ்ட ஜந்துக்களும், கடிவாயிலுள்ள விஷங்களும், தலைக் கேறிய விஷங்களும் பயந்து ஓடும்படி உன்னுடைய வேலாயுதத்தை அவற்றின்மீது விரைவில் ஏவி விடுவாயாக.

ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்பும் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்கச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அறணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்தனைக் கண்டாள்
நில்லாது ஓடநீஎனக்கு அருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்காக
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாகவும்

அங்கமெல்லாம் குறைந்து அழுகும் தொழுநோயும், நரம்பு பிசகுகளும், ஒருத்தலை குத்து, வாதம், குளிர் வியாதி கைகால், தலை இழுப்பு பித்த நோய் சூலை, க்ஷயம், குன்ம வயற்றுவலி, மயக்கம், சிரங்கு, கைகால் குடைச்சல், சிலந்தி குடலில் வரும் வெப்பு நோய், விலாப்புறங்களில் வரும் பிளவைகள், பரவும் இயல்புடைய தொடை வாழை கரப்பான், படுவன் என்னும் ஒருவகை சிலந்தி, கைகால் களில் வரும் கட்டிகள், பல் குத்து, ஈர்க்கட்டு, அரையாப்புக் கட்டிகள் முதலிய எல்லா வியாதிகளும் அடியேனைக்

Koviloor Digital Library

கண்டால் அவை அந்த இடத்திலிருந்து தாமதம் இன்றி நீங்கும்படி அருள் புரிவாயாக. பதினன்கு உலகிலுள்ள ஆண் பெண் அரசர் முதலியவர்களெல்லாம் அடியேனேடு மகிழ்ந்து உறவாயிருக்கும்டி அருள்வாயாக.

உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே ! சைலொளி பவனே !
திரிபுர பவனே திகழ்ஒளி பவனே
பரிபுர பவனே பலமொழி பவனே
அரிதிரு மருகா ! அமரா வதியைக்
காத்து தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்!

சரவணப் பொய்கையில் தோன்றினவனே, குன்று தோறும் ஒளி வீசுகின்ற குமாரப்பெருமானே, திரிபுரங்களைத் தகனம் செய்தருளிய சிவ பரம்பொருளே, தானே பிரகாசிக்கும் சுயஜோதியே. யுத்த களத்தில் குதிரை வீரனய் நின்ற பெருமானே. பிறப்பை வேரறுக்கும் சக்தியுடையவனே விஷ்னுவுக்கும் லக்ஷ்மிக்கும் மருகோனே, என்று தேவர்கள் உன்னைத் துதிசெய்ய நீ அவர்களுக்காக அசுரர்களைக் கொன்று அமராவதி என்றும் தேவலோகத்தை காத்து தேவர்களை சிறை மீட்டாய்.

கந்தா ! குகனே ! கதிர்வே லவனே !
கார்த்திகை மைந்தா ! கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே ! சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துஉறை கதிர்வேல் முருகா !
பழநிப் பதிவாழ் பால குமரா !

கந்தனே, அடியார் மனகுகையில் வாழும் பெருமானே கிரணக்களையுடைய வேலாயுதனே, கார்த்திகைப் பெண் களால் பாதுகாக்கப் பெற்றவனே, கடம்பமாலை அணிந்த வனே, கடம்பனையும் இடும்பனையும் அழித்த வேலையுடைய முருகா திருத்தனியில் எழுந்தருளயிருப்பவனே சிவகுமாரனே

Koviloor Digital Library

கதிர்காமத்திலும், பழநியிலும் வசிக்கின்ற குமரப் பெருமானே.

ஆவினன் குடிவாழ் அழகிய வேலா!
செந்தின் மலையுறும் செங்கல்வராயா!
சமரா புரிவாழ் சண்முகத்து அரசே!
காரார் குழலாள் கலைமகள் நன்குய்
என் நா இருக்க, யான் உனைப்பாட

திருவாவின் குடியில் வாழும் அழகிய வேலவனே திருச் செந்தூரில் மாமலைமீது வீற்றிருக்கின்ற செங்கல்வராயன் எனும் திருப்பெயர் பூண்டவனே, சமராபுரி என்னும் பதியில் வாழ்கின்ற ஆறுமுகக் கடவுளே, கரிய கூந்தலையுடைய சரஸ்வதிதேவி என்னுடைய நாவில் வீற்றிருக்க அடியேன் உன்னைப் பாடுகிறேன். அப்பனுகிய முருகப்பெருமானே மேன்மேலும் தொடர்ந்து என்னை ரக்ஷித்தருள்வாயாக.

பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன் அருள் ஆக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலாயுதனர்
சித்திபெற்ற அடியேன் சிறப்புடன் வாழ்க

மிகுந்த களிப்புடன் உன்னைப் பாடினேன் உன்னை நாடி ஆன்மபேதம் அற்று, ஆடவும், பாடவும் செய்தேன் திருவாவிநன்குடிப் பெருமானை நினைந்து உலக மாயைகள் மீதுள்ள ஆசைகள் நீங்க அடியேன் நெற்றியில் திருநீறு அணிந்தேன். உன் திருவடியை அடியேன் பெறுவதற்கு உன் திருவருள் அடியேனுக்கு உண்டாகும்படி பொன்னும் மெய்ப்பொருளும் தந்து அடியேனைக் காப்பாற்றுவாயாக. சகல பாக்கியங்களும் சிறப்புடன் அடியேன் பெற்று வேலா

Koviloor Digital Library

யுதப் பெருமானுடைய திருவருளும்பெற்று மிகவும் பெருமை யோடு அடியேன் வாழக் கடவேனாகவும்,

வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க

மயில் வாகனத்தையுடைய முருகவேள் வாழ்க அவன் கைவடிவேலும் வாழ்க. அவன் குறமகளாகிய வள்ளிநாச்சி யாருடன் வாழக்கடவன். பெருமானுடைய கோழிக் கொடி வாழ்க. வறுமைகள் நீக்கப்பெற்று அடியேனும் வாழக்கட வேனாகவும்.

எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பதுஉன் கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே

அடியேன் தெரிந்தோ தெரியாமலோ எத்தனை குறைகள் செய்தாலும் எத்தனை பிழைகள் செய்தாலும் என் அப்பனும் குருவுமாகிய நீ என் அம்மையாகிய வள்ளி நாச்சியாரோடு அப்பிழைகளை யெல்லாம் பொறுத்து அடியேனைக் காத்தருள் வாயாக'

பிள்ளையென்று அன்பாய் பிரியம் அளித்து
மைந்தனென் மீதுஉன் மனமகிழ்ந்து அருளி
தஞ்சமென்று அடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய

தாயும்தந்தையுமாகிய, நீ பிள்ளையாகிய என்மீது அன்பு கொண்டு மனமகிழ்ந்து அருள்வது யாதெனின், உன் அடி யார்கள் உன் திருவடிகளைச் சரண் புகுந்து, உன்னுடைய

Koviloor Digital Library

சஷ்டிக் கவசத்தை விரும்பி ஓதும்பொழுது அவர்களுக்கு சகல சம்பத்தையும் அருள்வாயாக. அவர்கள் மேன்மேலும் தழைந்துவாழ அருள்பாலிப்பாயாக. (கந்தர்சஷ்டிக் கவசத்தை விரும்பி ஓதும் அடியார்களை வாழவைக்க வேண்டுமென ஆசிரியர் ஆண்டவனிடம் வேண்டுதல் செய்கின்றார்,

பாலன் தேவ ராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடன்ஒரு நினைவது ஆகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைக்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்

சிறியேனான தேவராயன் சொன்ன இந்த கந்தர் சஷ்டிக் கவசத்தை மிகுந்த பக்தி சிரத்தையோடு ஸநானாதிகளை முடித்துக் கொண்டு திருநீறணிந்து ஆசாரத்துடன் நாள் தோறும் காலையிலும் மாலையிலும், அன்பு மேலீட்டால் ஒரு மனப்பட்டு கலக்கமின்றி தியானிப்பவர்கள்.

ஒருநாள் முப்பத் தாறுஉருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்து நீறு அணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்ந்தங்கு அருள்வர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யழித்திடும்

நாள் ஒன்றுக்கு 36 தரம் இம்மந்திரத்தை ஜபித்து திருநீறு அணிபவர்களுக்கு எட்டுத் திசைகளிலுமுள்ளவர்கள் வசியமாவர். எட்டுத் திசையதிபர்களாகிய இந்திரன் முதலிய தேவர்கள் இவர்களுடைய புகழ் எண்திசையிலும் பரவுவதற்கு வேண்டிய வாய்ப்பை அருளுவார்கள் பகைவர்கள் இவனை வந்து வணங்குவார்கள். ஒன்பது கோள்களும் (நவக்கிரகங்கள்) இவன் மகிழும்படியுள்ள நன்மைகளை வாரி வழங்கும்.

Koviloor Digital Library

நவமதன் எனவும் நல்எழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத்து அடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடி பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி

நவீன மன்மதன் போன்று நல்ல அழகைப் பெறுவர். எந்நாளும் முதுமையின்றி பதினாறு வயதினராய் நிலைபெற்று வாழ்வர். கேட்டு சிந்தித்து தெளிந்த நல்லவர்களுடைய கருத்திலே நடனம் புரிகின்ற கந்த பெருமானின் திருக்கைவேல் போன்ற இக்கவச மந்திரத்தை முறைப்படி தியானம் செய்பவர்களுக்கு மெயஞானம் விளங்கித் தோன்றும். அங்ஙனம் ஞானம் பெற்ற அவர்கள் பார்த்த பொழுது நோய்களெல்லாம் பயந்து ஓடும். பொல்லா தவர்கள் தூள்தூளாகுவர். எனவே சஷ்டி கவசம் சர்வ சத்ருக்களையும் நீருக்கும் வலிமையுடையது.

அறிந்துஎனது உள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துஉண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்து அமுது அளித்த
குருபரன் பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி

வெற்றிக்கு வேண்டுவது வீரம் ஆதலின் அஷ்டலட்சுமிகளில் வீரலட்சுமிக்கு எனதுள்ளம் விருந்துணவாகுக எனதுள்ளத்தில் முழுக்க முழுக்க வீரலட்சுமி நிறைந்திருப்பாளாக. (சரவணப் பொய்கையில் கார்த்திகைப் பெண்கள் அறுவரும் ஆறு குழந்தைகளுக்கும் சிவபெருமான் ஆணைப்படி பாலூட்டின்மையால் ஆறுமுகனுக்குக் 'கார்த்திக்கேயன்' எனும்நாமம்

Koviloor Digital Library

வந்தது. கார்த்திகை கௌரவிக்கப்பட்ட 'அருந்தா பத்தி ஞாயம் பற்றி 27 நட்சத்திரமும் மிருகனுல் கௌரவிக்கப்பட்ட தன்மையை 224வது அடி விளக்குகின்றது) பழனிக் குன்றின் மேலிருந்து விளையாடுகின்ற பாலசுப்ரமணியன் உயர்ந்த பரமாச்சாரியன் (குருநாதன்) ஆகையினுல் அன்னவருடைய செம்மையான திருவடிகளைப் போற்றுகிறேன்.

எனைத்தடுத்து ஆட்கொள எந்தனது உளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி

அடியேனை நீ புறப்புகாவண்ணம் தடுத்து ஆட்கொள்ளும் போது என்னுடைய உள்ளம் உன் திருவடியைத் தியானிக்கும் அப்பொழுது நீ எனதுள்ளத்தில் நீங்காதுறைகின்ருய். அத்தகைய வேலவனே உனக்கு வணக்கம்.

தேவர்சள் சேனுபதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி

தேவர்களுடைய சேனை தலைவனென உன்னை வணங்கி வாழ்த்துகிறேன். குறமகள் வள்ளியம்மையாரின் மனம் மகிழும்வண்ணம் உள்ள தலைவனே உன்னை நமஸ்கரிக்கின் றேன்.

திறமிகு திவ்ய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி

வலிமைமிக்க வன்மையுடைய தேகத்தையுடையவனே வணக்கம். பகைவர்களுக்கு துன்பம் கொடுக்கும் இயல் புடைய ஆயுதத்தையுடையவனே, பகைவர்க்குப் பகைவனே வணக்கம்.

கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி

கடம்ப மாலையை அணிந்த கந்தபெருமானே வணக்கம் வெற்றிச் சின்னமாக வெட்சி மாலையை அணிந்த பரோப காரனே வணக்கம்.

Koviloor Digital Library

உயர்கிரி கனக சபைக்கு ஓர் அரசரே !
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்

பெருமைமிக்க கந்த மாதன பர்வதத்தில் பொருந்திய பொற்சபைக்குரிய ஒப்பற்ற அரசனே' மயில்மீது அமர்ந்து நடனம் புரிகின்ற தேவரீருடைய திருவடித் தாமரையை அடியேன் தஞ்சம் புகுகின்றேன்.

சரணம் சரணம் சரவணபவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

''ஓம் சரவணபவ'' என்னும் ஒப்பற்ற சடாக்ஷர மந்திர வடிவமாகிய சண்முகப்பெருமானே! நீயே எனக்குப்புகலிடம் நீயே தஞ்சம், என்னைக் காப்பாற்றுவாயாக.

கந்தர் சஷ்டி கவசம் விரிவுரை

முற்றிற்று



ஸ்ரீமத் கச்சியப்ப சிவாச்சாரியார் அருளிய

கந்த புராணம்

ஆறுபடை வீட்டுத் துதிப் பாடல்கள்

திருப்பரங்குன்றம்

இருப்பரங் குறைத்திடும் எஃக வேலுடைப்
பொருப்பரங் குணர்வுறப் புதல்வி தன்மிசை
விருப்பரங் கமரிடை விளங்கக் காட்டிய
திருப்பரங் குன்றமர் சேயைப் போற்றுவாம்.

Koviloor Digital Library

திருச்சீரலைவாய்

சூரலை வாயிடைத் தொலைத்து மார்புகீண்டு
ஈரலை வாயிடும் எஃக ஏந்தியே
வேரலை வாய்தரு வெள்ளி வெற்பொரீஇச்
சீரலை வாய்வரு சேயைப் போற்றுவாம்.

திருவாவினன்குடி

காவினன் குடிலுறு காமர் பொன்னகர்
மேவினன் குடிவர விளியச் சூர்முதல்
பூவினன் குடிலையம் பொருட்கு மாலுற
ஆவினன் குடிவரும் அமலர்ப் போற்றுவாம்.

திருவேரகம்

நீரகத் தேதனை நினையும் அன்பினோர்
பேரகத் தலமரும் பிறவி நீத்திடும்
தாரகத் துருவமாத் தலைமை எய்திய
ஏரகத் தறுமுகன் அடிகள் ஏத்துவாம்.

குன்றுதோருடல்

ஒன்றுதொ ருடலை ஒருவி ஆவிமெய்
துன்றுதொ ருடலைத் தொடங்கி ஐவகை
மன்றுதொ ருடிய வள்ளல் காமுறக்
குன்றுதொ ருடிய குமரற் போற்றுவாம்.

பழமுதிர்சோலை

எழமுதி ரைப்புனத்தி இறைவி முன்புதன்
கிழமுதிர் இளநலங் கிடைப்ப முன்னவன்
மழமுதிர் களிறென வருதல் வேண்டிய
பழமுதிர் சோலையம் பகவற் போற்றுவாம்.



Koviloor Digital Library

உ
திருமுருகன் துணை



பாம்பன் ஸ்ரீகுமரகுருதாச சுவாமிகள் அருளிச்செய்த

பகை கடிதல்

திருவளர் சுடருருவே, சிவைகரம் அமருருவே
அருமறை புகழுருவே, அறவர்கள் தொழுமுருவே,
இருள்தபும் ஒளியுருவே, யெனநினை யெனதெதிரே,
குருகுகண் முதன்மயிலே, கொணர்தியு னிறைவனையே 1

மறைபுகழ் இறைமுனரே, மறைமுதல் பகருருவே,
பொறைமலி யுலகுருவே, புனநடை தருமுருவே
இறையிள முகவுருவே, யெனநினை யெனதெதிரே,
குறைவறு திருமயிலே, கொணர்தியு னிறைவனையே 2

இதரர்கள் பலர்பொரவே, யிவறுறையென தெதிரே
மதிரவிபல வெனதேர், வளர்சர ணிடையெனமா
சதுரொடு வருமயிலே, தடவரை யசைவுறவே,
குதிதரு மொருமயிலே, கொணர்தியு னிறைவனையே 3

பவநடை மனுடர்முனே, படருறு மெனதெதிரே
நவமணி துதல்ணியேர், நகைபல மிடறணிமால்,
சிவணிய திருமயிலே, திடனொடு நொடிவலமே,
குவலயம் வருமயிலே, கொணர்தியு னிறைவனையே 4

Koviloor Digital Library

அழகுறு மலர்முகனே, அமரர்கள் பணிகுகனே,
மழவுரு வுடையவனே, மதிநனி பெரியவனே
இழவில ரிறையவனே, யெனநினை யெனதெதிரே.
குழகதுமிளிர் மயிலே. கொணர்தியு னிறைவனையே 5

இணையறு மறுமுகனே, இதசசி மருமகனே,
இணரணி புரள்புயனே, யெனநினை யெனதெதிரே
கணபண வரவுரமே கலைவுற வெழுதருமோர்,
குணமுறு மணிமயிலே, கொணர்தியு னிறைவனையே 6

எளியவ, என்இறைவ குகாஎனநினை யெனதெதிரே,
வெளிநிகழ் திரள்கலை, மீன்மிளிர்சினையென மிடைவான்,
பளபள வெனமினுமா, பலசிறை விரிதருநீள்,
குளிர்மிணி வழிமயிலே, கொணர்தியு னிறைவனையே 7

இலகையில் மயில்முருகா வெனநினை யெனதெதிரே
பலபல களமணியே, பலபல பதபணியே,
கலகல களவெனமா, கவினோடு வருமயிலே,
குலவிடு சிகைமயிலே, கொணர்தியு னிறைவனையே 8

இகலறு சிவகுமரா வெனநினை யேனதெதிரே,
சுகமுனிவரர், ஏழில்சூர் சுரர்பலர் புகழ் செயனே,
தொகுதொகு தொகுவெனவே, சுரநட மிடுமயிலே,
குகபதி யமர்மயிலே,கொணர்தியு னிறைவனையே 9

கருணைபெய் கணமுகிலே, கடமுள பணிமுதலே
அருணைய னரனெனவே, யகநினை யெனதெதிரே,
மருமல ரிணிபலவே மருவிடும் களமயிலே,
குருபல அவிர்மயிலே, கொணர்தியு னிறைவனையே 10



இத்திருப்பதிகத்தைக் காலை, மாலை பக்தி பிறங்கப் பாடுநா செவ்வேட்பரமனை மயிலின்மீது தரிசிப்பர், பகையை வெல்வர்,

Koviloor Digital Library

உ

ஓம் குஹப்பிரஹ்மணே நம :



பாம்பன் ஸ்ரீகுமரகுருதாச சுவாமிகள் அருளிச்செய்த

குமாரஸ்தவம்

ஓம் ஷண்முக பதயே நமோநம		ஓம் அஸ்த்ர பதயே நமோநம:	
,, ஷண்மத	,,	சஸ்த்ர	,,
,, ஷட்க்ரிவ	,,	ஷஷ்டி	,,
,, ஷட்கிரீட	,,	இஷ்டி	,,
,, ஷட்கோண	,,	அபேத	,,
,, ஷட்கோச	,,	சுபோத	,,
,, நவநிதி	,,	வ்வியூஹ	,,
,, சுபநிதி	,,	மயூர	,,
,, நரபதி	,,	பூத	,,
,, சுரபதி	,,	வேத	,,
,, நடச்சிவ	,,	புராண	,,
,, ஷடக்ஷர	,,	பிராண	,,
,, கவிராஜ	,,	பக்த	,,
,, தபராஜ	,,	முத்த	,,
,, இஹபர	,,	அகார	,,
,, புகழ்முனி	,,	உகார	,,
,, ஜய ஜய	,,	மகார	,,
,, நயநய	,,	விகாச	,,
,, மஞ்சுள	,,	ஆதி	,,
,, குஞ்சரி	,,	பூதி	,,
,, வல்லீ	,,	அமார	,,
,, மல்ல	,,	குமார	,,

Koviloor Digital Library

ஓம் குமார குருப்யோ நம.

பாம்பன் சுவாமிகள் அருளிய

சண்முக கவசம்

அண்டமாய் அவனியாகி
அறியவொணாப் பொருளது ஆகித்
தொண்டர்கள் குருவும் ஆகித்
துகளறு தெய்வமாகி
எண்திசை போற்ற நின்ற
என் அருள் ஈசனான
திண்திறல் சரவணத்தான்
தினமும் என் சிரசைக் காக்க

வானம் முதலிய அண்டங்களாகி, பூமியாகி, எவரும் அறிய முடியாத பொருளாகி, தொண்டர்களுக்குக் குருவமாகி குற்றம் நீக்கும் தெய்வமுமாகி, எட்டுத்திக்கிலும் உள்ளவர்களும் துதிக்க நின்ற என் ஈசனாகிய சரவணபவனார் எனது சிரசைக் காப்பாராக.

ஆதியாம் கயிலைச் செல்வன்
அணிநெற்றி தன்னைக் காக்க
தாது அவிழ் கடப்பம் தாரான்
தான் இரு நுதலைக் காக்க
சோதியாம் தணிகை ஈசன்
துரிசு இலா விழியைக் காக்க
நாதனாம் கார்த்திக்கேயன்
நாசியை நயந்து காக்க

எல்லாப் பொருள்களுக்கும் ஆதியாகிய கயிலைச் செல்வன் எனது நெற்றியைக் காப்பாராக தேன் சிந்தும் கடம்பமாலை அணிந்த முருகன் எனது இரு புருவங்களையும் காப்பாராக. சோதிவடிவாகிய தணிகைஈசன் எனது கண்களை காப்பாராக. என் இறைவனாகிய கார்த்திகேயன் என் மூக்கினைக் காப்பாராக.

Koviloor Digital Library

இரு செவிகளையும் செவ்வேள்
இயல்புடன் காக்க; வாயை
முருகவேள் காக்க; நா பல்
முழுதும் நல்குமரன் காக்க
துரிசு அறு கதுப்பை யானைத்
துண்டனார் துணைவன் காக்க
திருவுடன் பிடரிதன்னைச்
சிவ சுப்பரமணியன் காக்க

இரண்டு காதுகளையும் செவ்வேல் காப்பாராக; வாயை முருகவேள் காப்பாராக; பற்களைக் குமரன் காப்பாராக; கன்னங்களை விநாயகன் துணைவன் காப்பாராக; பிடரியை சிவசுப்பிரமணியன் காப்பாராக.

ஈசனும் பாகுலேயன்
எனது கந்தரத்தை காக்க
தேசுறு தோள் விலாவும்
திருமகன் மருகன் காக்க
ஆசிலா மார்பை ஈராறு
ஆயுதன் காக்க; எந்தன்
ஏசிலா முழங்கை தன்னை
எழில் குறிஞ்சிக்கோன் காக்க

ஈசனாகிய கார்த்திக்கேயன் என்னுடைய கழுத்தைக் காப்பானாக; தோள்களையும் விலாக்களையும் குமரின் காப்பாராக. பன்னிரு கை உடையவர் எனது மார்பு காப்பாராக; குறிஞ்சி நிலக் கோமான் எனது முழங்கைகளைக் காப்பாராக.

உறுதியாய் முன்கைதன்னை
உமைஇள மதலைக் காக்க
தறுகண் ஏறிடவே என்கைத்
தலத்தை மாமுருகன் காக்க

Koviloor Digital Library

புறங்கையை அயிலோன் காக்க
பொறிக்கர விரல்கள் பத்தும்
பிறங்கு மால் மருகன் காக்க
பின்முதுகைச் சேய்காக்க

உமாதேவியின் இளைய குமாரன் என்முன் கைகளைக் காப்பாராக; எனது உள்ளங்கைகளை மகாவல்லமை பொருந்திய முருகன் காப்பாராக. புறங்கைகளை வேலன் காப்பாராக. பத்து விரல்களையும் திருமால் மருகன் காப்பாராக; குழந்தையுருவான முருகக் கடவுள் என்பின் முதுகைக் காப்பாராக.

ஊண்நிறை வயிற்றை மஞ்ஞை
ஊர்தியோன் காக்க வம்புத்
தோள்நிமிர் சுரேசன் உந்திச்
சுழியினைக் காக்க; குய்ய
நாணினை அங்கி கௌரி
நந்தனன் காக்க; பீஜ
ஆணியைக் கந்தன் காக்க;
ஆறுமுகன் குதத்தைக் காக்க

வயிற்றை மயில் வாகனன் காப்பாராக; நிமிர்ந்த தோள்களையுடைய தேவசேனாதிபதி என் உந்தியைக் காக்க நாபிக்கும் குறிக்கும் இடையிட்ட பகுதியை குமரன் காப்பாராக. பீஜங்களை இணைக்கும் தண்டை கந்தன் காப்பாராக. எரு வாயை அறுமுகன் காக்க.

எஞ்சிடாது இடுப்பை வேலுக்கு
இறைவனார் காக்க; காக்க
அஞ்சகணம் ஓரிரண்டும்
அரல் மகன் காக்க; காக்க
விஞ்சிடு பொருட் காங்கேயன்
விளர் அடித் தொடையைக் காக்க
செஞ்சரண் நேச ஆசான்
திமிரு முன் தொடையைக் காக்க

Koviloor Digital Library

வேலவன் எனது இடுப்பைக் காப்பாராக; சகனப் பகுதியை அரன் திருமகன் காப்பாராக; அடித்தொடையை கங்காசுதன் காப்பாராக. சிவந்த திருவடிகளை உடைய குருநாதன் எனது முன் தொடையைக் காப்பாராக.

ஏரகத் தேவன் என்தாள்
இரு முழங்காலும் காக்க
சீருடைக் கணைக்கால் தன்னைச்
சீரலைவாய்த் தே காக்க
நேருடைப் பரடிரண்டு
நிகழ் பரங் கிரியன் காக்க
சீரிய குதிக்கால் தன்னை
திருச் சோலை மலையன் காக்க

சுவாமிமலையில் எழுந்தருளியுள்ள பிரான் எனது முழங்கால்கள் இரண்டையும் காப்பாராக; திருச்செந்தூர் முருகன் எனது கணைக்கால் காக்க, புறங்கால்கள் இரண்டையும் திருப்பரங்குன்றத்தில் அமர்ந்துள்ள பெருமான் காக்க, குதிக்கால்களைப் பழமுதிர்ச்சோலைப் பெருமான் காக்க.

ஐயுறு மலையன் பாதத்து
அமர் பத்து விரலும் காக்க
பையுறு பழனி நாத பரன்
அகங் காலைக் காக்க
மெய்யுடல் முழுதும் ஆதி
விமல சண்முக வன் காக்க
தெய்வ நாயக விசாகன்
தினமும் என் நெஞ்சை காக்க

பாதத்தில் உள்ள பத்து விரல்களையும் குன்றுதோறும் விளங்குகின்ற குமரன் காக்க, பழநியில் வீற்றிருக்கும் முருகன் எனது உள்ளங்கால்களைக் காக்க, உடல் முழுவதையும் சண்முகன் காக்க, எனதுநெஞ்சை விசாகப் பெருமான் காக்க

Koviloor Digital Library

ஒலிஎழ உரத்த சத்தத்தொடு
வரு பூதப் பிரேதம்
பலிகொள் இராகதப் பேய்
பலகனத்து எவை ஆனாலும்
கிலிகொள எனைவேல் காக்க
கெடுபரர் செய்யும் சூனியம்
வலியுள மந்த்ர தந்த்ரம்
வருத்திடாது அயில் வேல் காக்க

உரத்த சப்தமிட்டு வரும் பூதம், பேய் முதலிய தீய கணங்கள் எவையாயினும் அவை அஞ்சச் செய்து அவற்றால் எனக்கு துன்பம் ஏற்படாமல் ஞானசக்திவேல் காக்க பகைவர் செய்யும் சூனியம் மந்திரம் தந்திரம் எதுவும் என்னை வருந்திடாமல் வேல் காக்க.

ஓங்கிய சீற்றமே கொண்டு
உவணி வில் வேல் சூலங்கள்
தாங்கிய தண்டம்எஃகந்தடி
பரசு ஈட்டி ஆதி
பாங்குடை ஆயுதங்கள்
பகைவர் என்மேலே ஓச்சின்
தீங்கு செய்யாமல் என்னைத்
திருக்கைவேல் காக்க காக்க

வாள், வில், வேல், சூலம், சக்கரம், தடி, தண்டு, ஈட்டி முதலிய ஆயுதங்களைப் பகைவர் என்மீது எறிந்தால் அவை எனக்கு எவ்விதமான தீங்கும் செய்யாமல் முருகப்பெருமான் திருக்கைவேல் காக்க.

ஒளவிய முளர் ஊன் உண்போர்
அசடர் பேய் அரக்கர் புல்லர்
தெவ்வர்கள் எவரானாலும்
திடமுடன் என்னை மற்கட்டத்

Koviloor Digital Library

தவ்வியே வருவாராயில்
சராசரமெலாம் புரக்கும்
கவ்வுடைச் சூர சண்டன்
கைஅயில் காக்க காக்க

பொருமையுடையவர்கள், புலால் உண்பவர்கள் கீழ் மக்கள், பேய், அரக்கர், அற்பர், பகைவர், முதலிய எவ ரேனும், மற்போரில் இறுகிப் பிடிக்க வருவராயின் கந்த வேள் தன் கைவேல் எனைக் காக்க.

கடுவிடப் பாந்தள் சிங்கம்
கரடி நாய் புலிமா யானை
கொடிய கோனாய் குரங்கு
கோலமார்ச் சாலம் சம்பு
நடையுடை எதனுலேனும்
நான் இடர்ப்பட்டிடாமல்
சடிதியில் வடிவேல் காக்க
சானவி முளைவேல் காக்க

பாம்பு, சிங்கம், கரடி, நாய், புலி, குதிரை, யானை ஓநாய், குரங்கு, காட்டுப்பன்றி, பூனை முதலிய மிருகங்க ளால் நான் துன்புருமல் விரைவில் வந்து வடிவேல் காக்க.

ஙகரமே போல் தழீஇ
ஞானவேல் காக்க வன்புள்
சிகரி தேள் நண்டுக் காலி
செய்யன் ஏறு ஆலப் பல்லி
நகமுடைய ஓந்தி பூரான்
அளிவண்டு புலியின் பூச்சி
உகமிசை இவையால் எற்கோர்
ஊறிலாது ஐவேல் காக்க

Koviloor Digital Library

என்னையும் என் மனத்தையும் நகரம் போல் தழுவி ஞானவேல் காக்க, வலிய பறவைகளும், எலி, தேள், நண்டுந் தெருக்கால், வலிமைமிக்க செய்யான், விஷப்பல்லி, ஓணான், பூரான், சீதமண்டலம், சிலந்தி இவைகளால் எனக்கு ஒரு கெடுதலும் ஏற்படாமல் அழகிய வேல் காக்க

சலத்தில் உய்வன் மீனேறு
தண்டுடைத் திருக்கை மற்றும்
நிலத்திலும் சலத்திலும் தான்
நேடும் துயர் தரற்கே உள்ள
குலத்தினல் நான் வருந்தம்
கொண்டிடாது அவ்வவ் வேளை
பலத்துடன் இருந்து காக்க
பாவகி கூர்வேல் காக்க

நீரில் வாழும் முதலை, தவளை, தடி போன்ற வாலுள்ள திருக்கை மீன் முதலியவற்ருலும் நிலத்திலும் நீரிலும் பெரும் துன்பம் தருவதற்கு என்றே உள்ள உயிரினங்களால் நான் வருந்தாமல் என் உடன் இருந்து அக்கினியை உடலாகக் கொண்ட சுடர்வேல் காக்க.

ஏமலியம் பரியன் கைவேல்
நவகிரகக் கோள் காக்க
சுமவிழி நோய்கள் தந்தசூலை
யாக்கிராண ரோகம்
திமிர் கழல் வாதம், சோகை
சிரமடி, கர்ண ரோகம்
எமை அணுகாமலே
பன்னிரு புயன் சயவேல் காக்க

அழகிய மயிலை வாகனமாக உடைய முருகன் கைவேல் நவகிரகங்களால் எனக்கு நேரும் கேடுகளினின்று காக்க கண்களில் பூ விழுதல், பல்வலி, மூக்குவலி, திமிர்வாதம் சோகை, காதுவலி, முதலிய நோய்கள் என்னை அணுகாமல் பன்னிரு தோளான் தன் வெற்றிவேல் காக்க.

Koviloor Digital Library

டமருகத் தடி போல் நைக்கும்
தலையிடி கண்டமாலை,
குமுறு விப்புருதி குன்மம்,
குடல்வலி, ஈழை, காசம்.
நிமிரொணு திருத்தும் வெட்டை
நீர்ப்பிரமேகம் எல்லாம்
எமை அடையாமலே குன்று
எறிந்தவன் கை வேல் காக்க

உடுக்கை அடிபோல் இடிக்கும் தலைஇடி கண்டமாலை, சிலந்தி, குன்மம் குடல்வலி, சளி, காசம், நிமிரமுடியாதபடி குனியவைக்கும் வெட்டை முதலிய எல்லாம் என்னை அடை யாமல் கிரவுஞ்ச மலை பிளந்த குமரன் கைவேல் காக்க.

இணக்கமில்லாத பித்தளரிவு
மா சுரங்கள் கைகால்
முணக்கவே குறைக்கும் குஷ்டம்
மூல வெண்மூளை தீ மந்தம்
சணத்திலே கொல்லும் சன்னி
சாலமென்று அறையும் இந்தப்
பிணிக்குலம் என்னை ஆளாமல்
பெரும் சத்தி வடிவேல் காக்க

பித்த எரிவு சுரங்கள், கை கால் குறைக்கு குஷ்டம், வெண்மூல மூளை, சன்னி முதலிய நோய் எதுவும் என்னை வயப்படுத்தாமல் சக்திவேல் காக்க,

தவனமா ரோகம், வாதம்,
சயித்தியம், அரோசகம், மெய்
சுவரவே செய்யும் மூலச் சூடு
இளைப்பு உடற்று விக்கல்
அவதி செய் பேதி சீல் நோய்
அண்ட வாதங்கள் சூலை
எவையும் என்னிடத்தில் எய்தாமல்
எம்பிரான் திணிவேல் காக்க

Koviloor Digital Library

நாவரட்சியுண்டாகும் பெரு நோய், வாதம், சீதளம் மூலச்சூடு இளைப்பு, வருத்தம், விக்கல், துன்பம் செய்கின்ற பேதிசீழ் நோய், அண்டவாதங்கள் முதலிய எதுவும் என்னிடம் சேராமல் எமது பிரானின் திண்ணிய வேல் காக்க

நமைப்புறு கிரந்தி, வீக்கம்
நணுகிடு பாண்டு, சோபம்
அமர்த்திடு கருமை வெண்மை
ஆகுபல் தொழுநோய் கக்கல்
இமைக்கு முன்னுறு வலிப்போடு
எழுபுடைப் பகந்த ராதி
இமைப்பொழுதேனும் என்னை
எய்தாமல் அருள்வேல் காக்க.

கிரந்தி பாண்டு பலவிதமான தொழுநோய்கள், வலிப்பு முதலிய நோய்கள் ஒருகணமேனும் என்னைச் சேராமல் அருள்வடிவான வேல் காக்க.

பல்லது கடித்து மீசை
படபடென்றெ துடிக்கக்
கல்லினும் வலிய நெஞ்சம்
காட்டியே உருட்டி நோக்கி
எல்லினும் கரிய மேனி
எம்படர் வரினும் என்னை
ஒல்லையில் தாரகாரி
ஓம் ஐம் ரீம் வேல் காக்க

பல்லைக் கடித்து மீசை படபட என்று துடிக்க கண்களை உருட்டி விழித்து கரிய மேனியை உடைய யமதூதர் வந்தாலும் தாரகாசுரனை சங்கரித்த முருகன் ஓம் ஐம் ரீம் வேல் விரைவில்காக்க,

மண்ணிலும் மரத்தின் மீதும்
மலையிலும் நெருப்பின் மீதும்
தண்ணிறை ஜலத்தின் மீதும்
சாரி செய் ஊர்தி மீதும்

Koviloor Digital Library

விண்ணிலும் பிலத்தின் உள்ளும்
வேறு எந்த இடத்தும் என்னை
நண்ணி வந்தருளார் சஷ்டி
நாதன் வேல் காக்க; காக்க

மண்ணிலும், மரத்தின் மேலும், மலையிலும், நெருப்பின் மேலும், குளிர்ந்த நீரின் மேலும், வேறு எந்த இடத்திலும் என்னை அணுகி வந்து! அருள் புரியும் சஷ்டிநாதன் வேல் காக்க.

யகரமே போல் சூழ் ஏந்து
நறும்புயன் வேல் முன் காக்க
அகரமே முதலாம் ஈராறு
அம்பகன் வேல் பின் காக்க
சகர மோடு ஆறு மானோன்
தன் கை வேல் நடுவில் காக்க
சிகரமின் தேவ மோலித்
திகழை வேல் கீல்மேல் காக்க

முத்தலையுள்ள சூலம் ஏந்திய முருகன் வேல் என் முன் புறம் காக்க, அகர முதல் பன்னிரு உயிர் எழுத்துக்களையே திருக்கண்களாக உடைய முருகனின் வேல் எனது பின்புறம் காக்க. ஆறெழுத்தாயினவன் கைவேல் நடுவேல் காக்க, தலையில் ஒளிவீசும் திருக்குமரன் வேல் என்கீழும் மேலும் காக்க.

ரஞ்சித மொழி தேவானை
நாயகன்; வள்ளி பங்கன்
செஞ்சய வேல் கிழக்கில்
திறமுடன் காக்க; வங்கி
விஞ்சிடு திசையின் ஞான
வீரன்வேல் காக்க; தெற்கில்
எஞ்சிடாக் கதிர் காமத்தோன்
இகலுடைக் கரவேல் காக்க

Koviloor Digital Library

இனிய மொழியாளரான தெய்வானை நாயகனும், வள்ளி மணாளனுமான முருகனது வேல் கிழக்கில் காக்க. அக்னி திக்கில் வீரவேல் காக்க. தெற்குத் திக்கில் கதிர்காமத்தோன் கைவேல் காக்க.

லகரமே போல் காளிங்கன்
நல் உடல் நெளிய நின்று
தகர மர்த்தனமே செய்த
சங்கரி மருகன் கைவேல்
நிகழெனை நிருதி திக்கில்
நிலை பெறக்காக்க; மேற்கில்
இகலயில் காக்க; வாயுவினில்
குகன் கதிர்வேல் காக்க

'ல' என்ற எழுத்துபோல் வளைந்து ஆரவாரம் செய்த காளிங்கன் என்ற பாம்பின் மீது நடம் செய்த திருமாலின் மருகன் தன் கைவேல் நிருதியில் காக்க. குகன் கதிர்வேல் வாயு திக்கில் காக்க.

வடதிசை தன்னில் ஈசன்
மகன் அருள் திருவேல் காக்க
விடையுடை ஈசன் திக்கில்
வேதபோதகன் வேல் காக்க
நடக்கையில் இருக்கு ஞான்றும்
நவிலகையில் நிமிர்கையில் கீழ்
கிடக்கையில் தூங்கு ஞான்றும்
கிரிதுளைத்துள வேல் காக்க

வடக்கில் சிவக்குமரன் அருள்வேல் காக்க. ஈசான திக்கில் பிரமனுக்கு பிரணவப் பொருள் உரைத்த முருகன் திருவேல் காக்க, நடக்கும் போதும் இருக்கும் போதும் பேசும் போதும், நிமிர்ந்து எழும்போதும் தரையில் கிடக்கும் போதும், தூங்கும் போதும், கிரவுஞ்ச மலை துளைத்த வேல் காக்க.

Koviloor Digital Library

இழந்து போகாத வாழ்வை
ஈயு முத்தையனுர் கை வேல்
வழங்கு நல் ஊன் உண்போதும்
மால் விளையாட்டின் போதும்
பழஞ்சுரர் போற்றும் பாதம்
பணிந்து நெஞ்சடக்கும் போதும்
செழுங் குணத் தோடே காக்க
திடமுடன் மயிலுங் காக்க

உண்ணும் போதும், உலவும் போதும், பணிந்து போற்றும் போதும், தியானிக்கும் போதும், குமரன் கைவேல் காக்க மயில் காக்க.

இளமையில் வாலி பத்தில்
ஏறிடு வயோதி கத்தில்
வளர் அறுமுகச் சிகன் தான்
வந்து எனைக் காக்க; காக்க
ஒளி எழு காலை முன் எல்
ஓம் சிவசாமி காக்க
தெளி நடு பிற்பகல் கால்
சிவகுரு நாதன் காக்க

இளமையிலும். மூப்பிலும் அறுமுகச் சிவன் எனைக் காக்க ஞாயிறு தோன்றும் காலையிலும் முற்பகலிலும் நடுப்பகலிலும் பிற்பகலிலும சிவனுர் மனங்குளிர உபதேசித்த குரு நாதன் எனைக் காக்க.

இறகுடைக் கோழித் தோகைக்கு
இறை முன் இரவில் காக்க
திறல் உடைச் சூர் பகைத் தே
திகழ் பின் இரவில் காக்க

Koviloor Digital Library

நறவு சேர் தாள் சிலம்பன்
நடுநிசி தன்னில் காக்க
மறை தொழு குழகன் எம்கோன்
மாருது காக்க; காக்க

சேவலுக்கும், மயிலுக்கும் இறையாகிய முருகன் இரவில் என்னைக் காக்க, சூரனை சங்கரித்த வேலன் பின் இரவில் என்னைக் காக்க. தேன் ஒழுகு மாலையும் சிலம்பும் அணிந்த முருகன் நடுநிசியில் என்னைக் காக்க, வேதங்கள் தொழும் கட்டிளங் குமரன் எப்போதும் என்னைக் காக்க.

இனம் எனத் தொண்ட ரோடும்
இணக்கிடும் செட்டி காக்க
தனிமையில் கூட்டம் தன்னில்
சரவண பவனர் காக்க
நனியனுபூதி சொன்ன நாதர்
கோன் காக்க வித்தைக்
கனிவோடு சொன்ன தாசன்
கடவுள் தான் காக்க வந்தே

திருத் தொண்டர் குழத்தில் என்னைச் சேர்க்கும் செட்டி காக்க, தனியாயுள்ள போதும் கூட்டத்தில் உள்ள போதும் சரவண பவனர் காக்க, கந்தர் அநுபூதி பாடிய அருணகிரிநாதருக்கு அதிபதியாகிய முருகன் காக்க இதைக் கனிவுடன் கூறிய குமரகுரு தாசரின் கடவுளாகிய முருகன் வந்து காக்க.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 30807

